
அலகு - 1

# துளித்துளியாய்



துளித் துளியாய் மழையுமே
தூறல் போட்டுப் பெய்யுதே!

குளிர் குளிராய் காற்றுமே
கூடி ஒன்றாய் வீசுதே!

மேகம் இருள் கவ்வுது
மின்னல் வெட்டி மின்னுது

பலத்த இடி ஓசைதான்
பக்க மெல்லாம் கேட்குது!


ஓடையில் நீர் நிறையுது
ஓடி ஓடி வருகுது!


குளம் குட்டை நிறையுது
குடிக்கத் தண்ணீர் கிடைக்குது!

வயல் வரப்பு செழிக்குது
வாய்க்காலில் நீர் ஓடுது!

பசுமை யெங்கும் ஓங்கவே
பாரில் மழை தேவையே!

**-வல்லநாடு ராமலிங்கம்**





## நான் கண்டவை

| | | |
|---|---|---|
| | | |

## என் அனுபவம்

ஒரு மழை நாளில் ..................................................................................................

..................................................................................................

..................................................................................................

..................................................................................................

..................................................................................................

# நண்பன் எங்கே?



"நீ எப்படி இங்கு வந்தாய்?" என்று முத்து மழைத்துளியிடம் கேட்டான்.

"நாங்கள் மேக வீட்டில் இருந்தோம். பூமியின் அழகை ரசித்துக்கொண்டிருந்தோம். அப்போது குளிர்ந்த காற்று வீசியது. அது எங்களைத் தள்ளிவிட்டது. நாங்கள் நான்கு பேரும் ஒருவர் கையை ஒருவர் பிடித்துக்கொண்டு விழ ஆரம்பித்தோம். காற்று எங்களைப் பிரித்தது. ஆளுக்கொரு திசையில் பிரிந்தோம். என் நண்பர்களை மீண்டும் காண்பேனா?" மழைத்துளி புலம்பியது. "வருந்தாதே! உன் நண்பர்கள் ஆற்றிற்குப் போயிருப்பார்கள். நான் கண்டுபிடித்துத் தருகிறேன்," முத்து தைரியம் சொன்னான்.

ஆற்றின் இக்கரையில் தேடினான். அக்கரையிலும் தேடினான். தேடித்தேடி கால்வலித்தது. கண்ணும் வலித்தது. சோர்ந்து போய்க் கரையில் அமர்ந்தான்.

"அதோ.. என் நண்பன்...! சேம்பு இலையின் மேல்..."

மழைத்துளி துள்ளிக் குதித்தது.

"ஒரு நண்பன் கிடைத்துவிட்டான். மற்றவர்கள் எங்கு போனார்களோ?"

"வருத்தப்படாதே நண்பா! இங்கு எங்காவதுதான் இருப்பார்கள். வா தேடுவோம்," அவர்கள் தேடினார்கள்.

அப்போது...

"தண்ணீர் வந்திருச்சு!" கிணறு வெட்டியவர்கள் மகிழ்ச்சியுடன் கத்தினார்கள். முத்து ஓடினான். கிணற்றுக்குள் தேடினான்.

"ஐயோ இங்கும் நண்பர்கள் இல்லையே!" இருவரும் வருத்தப்பட்டனர்.

"பூமியில் விழுந்த மழைத்துளி கிணற்றுக்குள் எப்படிப் போகும்?" முத்துவிற்குச் சந்தேகம் ஏற்பட்டது. யோசித்துக் கொண்டே நடந்தான்.

"என்ன பலமான யோசனை?" பவளம் அக்கா கேட்டாள்.

"பூமியில் விழுந்த மழைத்துளி கிணற்றுக்குள் போகுமா?"

தன் சந்தேகத்தைக் கேட்டான் முத்து.

"சொன்னால் உனக்குப் புரியாது..

செய்து காட்டுகிறேன்," என்றாள் பவளம்.

ஒரு வாளியில் பாதியளவு மண் நிரப்பினாள். சுற்றிலும் துளை யிட்ட ஒரு பாத்திரத்தை மண்ணிற்குள் தாழ்த்தி வைத்தாள்.

இருவரும் வேறொரு பாத்திரத்தில் தண்ணீரெடுத்து வாளியிலுள்ள மண்ணில் மட்டும் ஊற்றினர்.

வாளியிலுள்ள மண் நன்றாக நனையும் விதத்தில் ஊற்றினர்.



**என்ன நிகழ்ந்திருக்கும்?**

# மழைப்பந்தல்



“அக்கா! என் மழைத்துளியைத் தேட வேண்டும். அதற்கு என்ன வழி?” முத்து அக்காவிடம் கேட்டான்.

பவளம் யோசித்தாள். “அருமையான வழி உள்ளது. நிறைய மழைநீரைப் பிடிக்கவேண்டும். மழைப்பந்தல் கட்டலாம். நீ ஒரு பழைய வேட்டி கொண்டுவா. நான் நான்கு குச்சிகள் கொண்டு வருகிறேன்,” என்றாள்.

இருவரும் சேர்ந்து மழைப்பந்தல் கட்டினார்கள்.

“ஆகா! இனி நிறைய மழைத்துளிகளைப் பிடிக்கலாம். என் நண்பர்களைத் தேடிப்பார்க்கலாம்,” முத்து துள்ளிக் குதித்தான்.

## நிறைவு செய்யுங்கள்

| கிழமை | இரவு | பகல் | மொத்தம் |
|---|---|---|---|
| ஞாயிற்றுக்கிழமை | 13 மூடி | 6 மூடி | ................ |
| திங்கள்கிழமை | 12 மூடி | 5 மூடி | ................ |
| செவ்வாய்க்கிழமை | 8 மூடி | ................ | 15 மூடி |

- மிகவும் கூடுதல் மழை பெய்த நாள் எது?
- மிகவும் குறைவாக மழை பெய்த நாள் எது?
- மூன்று நாள் பகலிலும் சேர்த்து எத்தனை மூடி மழை பெய்தது?

  ☐ + ☐ + ☐ = ☐.
- திங்கள்கிழமையை விட செவ்வாய்க் கிழமை எத்தனை குறைவு?

  ☐ - ☐ = ☐.
- ஞாயிற்றுக்கிழமையும் திங்கள்கிழமையும் சேர்த்து மொத்தம் எவ்வளவு?

  ☐ + ☐ = ☐.
- ஞாயிற்றுக்கிழமையை விட செவ்வாய்க்கிழமை எவ்வளவு குறைவு?

  ☐ - ☐ = ☐.

## தேடித் தேடி...

“அக்கா! நாம் மட்டும் தேடினால் மழைத்துளியைக் கண்டுபிடிக்க முடியுமா? முத்துவிற்குச் சந்தேகம் வந்தது.

“உனது நண்பர்களையும் தேடச்சொல். பள்ளியிலும் தேடிப்பார்”, பவளம் சொன்னாள். “அங்கும் மழைப்பந்தல் அமைக்க வேண்டுமா?” முத்துவிற்கு ஒரே சந்தேகம். “வேண்டாம் முத்து. வாளியைப் பயன்படுத்தலாமே,” பவளம் சொன்னாள்.


முத்துவிற்கு நீங்களும் உதவுங்கள்.

**எனது வீட்டில் அளந்தபோது.**



| கிழமை | காலை | மாலை | மொத்தம் |
|---|---|---|---|
| | | | |

**எனது பள்ளியில் அளந்தபோது**



| கிழமை | காலை | மாலை | மொத்தம் |
|---|---|---|---|
| | | | |

**எனது நண்பன் வீட்டில் அளந்தபோது.**

| கிழமை | காலை | மாலை | மொத்தம் |
|---|---|---|---|
| | | | |

- மழைத்துளியைக் கண்டுபிடித்திருப்பார்களா? எல்லா இடத்திலும் ஒரே அளவில் மழை பெய்கிறதா?